**தலைப்பு 193 - தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு**

## 1. நிதி கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலை பற்றிய் கூற்று, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதி செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன அடங்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் என்பன அடங்கிய முழுமையான அறிக்கை 2019 யூன் மாதம் 13 ஆம் திகதி பிரதம கணக்கீட்டு அலுவலரிடம் கையளிக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கையானது பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான தன்மை ஒன்றினை பிரதிபலிக்கச் செய்கின்றது என்பதே நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதாகவும் உள்ளன என்பதே எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு அலுவலரின் மற்றும் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள்

---

போதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கதேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலை ஒன்றினை பிரதிபலிக்கச் செய்கின்றவாறு நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக இடம்பெறக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவாறு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றினை முறையாக பேணிவருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) துணைப் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதி நிருவாகத்திற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை தயாரித்து பேணி வருவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் அந்த பயனுள்ள தன்மை பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை பயனுள்ள முறையில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

பொதவாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவாஎன்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சா்ா துல்லியமான முறையில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. என்னால்,

மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை ஏற்படுத்தக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கம் பொருட்டு அமைச்சின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பயனுள்ள செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களை சமா்ப்பிக்கும் போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் என்பவற்றிற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமானவாறும் நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு வெளிப்படுத்தல்கள், பிரதான உள்ளக நிருவாக குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு விளக்கப்பட்டது.

## 1.5 பிற சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

22018 இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சினால் கடந்த வருடங்களுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தேவையொன்று காணப்படாமையால் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுகளுடன ஒத்திசைகின்றது என்பதனை குறிப்பிட முடியாது. அதன் காரணமாக

நிதிக் கூற்றுக்கள் பற்றிய பரிந்துரைகளும் இந்த அறிக்கையின் ஊடாக முன்வைக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கைகளின் நடவடிக்கை முறைகளுக்கு இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | சிபாரிசு | பிரதான கணக்கீட்டு அலுவலரின் பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் அச்சீட்டு குறிப்புகளின் பிரகாரம் நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினமான ரூ. 20,490,417 ஆன போதிலும் நிதிக் கூற்றுக்களில் செலவினமானது ரூ. 13,108,077 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2018 நவம்பரம் மாதம் 21 ஆம் திகதிய இல. 267;2018 உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சானது செயற்படுதல் வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். திறைசேரியின் அச்சீட்டு பிரதியின் பிரகாரம் நி.பி. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினமானது மீண்டு வரும் ரூ. 3,616,439 மற்றும் மூலதன செலவினம் ரூ. 16,813,978 என சீராக்கம் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றேன். |

### 1.6.2 நிதி செயலாற்றுகை கூற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | சிபாரிசு | பிரதான கணக்கீட்டு அலுவலரின் பரிந்துரை |
|---|---|---|
| நிதி செயலாற்றுகை கூற்றிற்கு பிற பெறுகைகளாக ரூ. 6,038,704 குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மாதாந்த கணக்கு சாரம்சத்தின் பிரகாரம் ஏனைய பெறுகைகளின் பெறுமதி ரூ. 6,051,779 என அவதானிக்கப்படுகின்றது. | அமைச்சினால் வருமானம் அல்லாத பெறுகைகளை சரியானவாறு குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதி செயலாற்றுகை கூற்றுக்குரிய பிற பெறுகைகளாக ரூ. 6,038,704 குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் மாதாந்த கணக்கு சாரம்சத்தின் பிரகாரம் பிற பெறுகைகளின் பெறுமதி ரூ. 6,051,779 ஆகும். ரூ. 13,075 பெறுமதி ஒன்று குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாதாந்த கணக்கு சுருக்கத்தில் பிற பெறுகைகளாக ரூ. 13,075 தொகையினை சீராக்கம் செய்வதற்கு குறித்துக் கொண்டேன். |

### 1.6.3 ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு ஆண்டிலே நிதி சாராத சொத்துகள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ஆரம்ப மீதிகள் மற்றும் கடந்த ஆண்டின் மீதிகள் இடையே ரூ. 43,948,452 வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | ஆதனங்கள், பொறித்தொகுகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய சரியான மற்றும் முழுமையான அறிக்கைகளை பேணி வருதல் வேண்டும். | மீளாய்வு ஆண்டிலே நிதி சாராத சொத்துகள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ஆரம்ப மீதிகள் மற்றும் கடந்த ஆண்டின் இறுதி மீதிகள் என்பவற்றுக்கு இடையே வித்தியாசம் ஒன்று உள்ளதனை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டிலே தொழில் வாசஸ்தலங்களை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 10,000,000 பெறுமதியானது அந்த ஆண்டிலே கணக்கு பதியப்பட்டிருக்கவில்லை. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிலும் கட்டிடம் மற்றும் நிர்மாணம் என்பவற்றின் கீழ் இப்பெறுமதி கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வு ஆண்டிலே நிதிக் கூற்றுகளில் மற்றும் திறைசேரி அறிக்கைகளில் கட்டிடம் மற்றும் நிர்மாணம் என்பவற்றின் பெறுமதி சரியாக இடம்பெற்றிருக்கவில்லை. | ஆதனங்கள், பொறித்தொகுகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய சரியான மற்றும் முழுமையான அறிக்கைகளை பேணி வருதல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டிலே தொழில் வாசஸ்தலங்களை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த பெறுமதி கட்டிடம் மற்றும் நிர்மாணம் என்பவற்றில் உள்ளடக்கப்படவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். அப்பெறுமதியானது எதிர்வரும் ஆண்டிலே சரியாக கட்டிடம் மற்றும் நிர்மாணம் என்பவற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மூலதன செலவினத் தலைப்பு 01 இன் கீழ் தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய நிறுவனத்திற்கு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் அந்நிறுவனத்தின் அலங்காரப் பணிகளுக்காக ரூ. 3,000,000 செலவிடப்பட்டிருந்தது. அலங்காரச் செலவினம் இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்குப் பதியப்பட்டிருந்ததனால் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் | உறுதியான மூலதன நிதி ஏற்பாடுகளை அப்பணிக்காக மாத்திரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்வரும் காலங்களில் கணக்கு நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியானது அத்தொகையினால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய நிறுவனனத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூ. 4,054,277 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களாவன, இலத்திரனியல் உபரகரணங்களின் கீழ் கணக்குப் பதியப்பட்டிருந்தது. | சரியான சொத்துத் தலைப்புகளின் கீழ் கணக்கு பதிதல் வேண்டும். | NIOSH நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பபடடிருந்த ரூ. 4,054,277 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் தவறுதலாக இலத்திரனியல் உபகரணங்களின் கீழ் கணக்கு பதியப்பட்டிருந்தது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (உ) | நிதி சாரா சொத்துகள் பற்றிய கூற்றின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிலே மூலதனச் சொத்துகளை கொள்வனவு செய்தல் பெறுமதி மற்றும் நிதி செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் மூலதனச் சொத்துகளின் கொள்வனவு பெறுமதி என்பவற்றுக்கிடையே ரூ. 6,676,310 பெறுமதியான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | அவ்விடயம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி மற்றும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள எண்ணிக்கை என்பன ஒன்றுடன் ஒன்று சமமாக இருத்தல் வேண்டும். | குறிப்புகளை பதியும் போது தவறு என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். அதனை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஊ) | கொம்ட்ரோலர் ஜனராலிடம் சமர்ப்பித்திருந்த அறிக்கையின் பிரகாரம் பிற இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூ. 42,420,371 ஆன போதிலும் நிதி சாராத சொத்துகள் பற்றிய கூற்றின் பிரகாரம் அது ரூ. 42,701,299 ஆக குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் ரூ. 280,927 பெறுமதியால் வித்தியாசம் ஒன்றினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. | கொம்ட்ரோலர் ஜனராலிடமிருக்கும் சொத்துகள் பற்றிய பதிவேடு மற்றும் அமைச்சின் சொத்துகள் பற்றிய பதிவேடுகள் என்பன காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்தி பேணி வருதல் வேண்டும். | திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நிறுவனத்திடம் காணப்பட்ட அனைத்து சொத்துகளையும் ஆரம்ப மீதியொன்றாக CIGAS கணினி நிகழ்ச்சித்திட்டத்தில் பதியப்பட்டது. இந்த ரூ. 280,927/- பெறுமதியான தொகையின் வித்தியாசத்தை தொழில் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் கொம்ப்ரோலர் ஜனராலுக்கு சமர்ப்பித்திருந்த அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்த உருப்படிகள் சிலவற்றின் கூட்டுத்தொகையாகும். |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் பற்றிய இணக்கக்கூற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்து ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற அலுவலர்கள் இருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 290,715 பெறுமதியான கடன் மீதி 05 வருடங்களாக நிலுவையாக உள்ளது. | தாபன விதிக் கோவையின் xxiv அத்தியாயத்தின் பிரிவுகளின் பிரகாரம் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முகாமைத்துவ உதவியாளர் சேவையில் பணியாற்றிய திரு. ஏ.ஜே.எம். கோராளவிடம் அறவிடப்படாதிருந்த நிலுவைக் கடன் மீதியானது, ஓய்வு‘தியத் திணைக்களத்தின் ஊடாக சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வரப்படுகின்றது. சேவையை விட்டுச் சென்றுள்ள திருமதி. டப்ளியு.ஜி.டீ.சி. சுகததாஸவின் கடன் நிலுவைத் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக வழக்கு தொடுப்பதற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

### 1.6.5 கணக்காய்விற்கு சான்று ஆதாரங்கள் இல்லாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | அமைச்சின் கருத்துரை |
|---|---|---|
| மெஹவர பியஸ கட்டிடத்தின் உள்ளக வடிவமைப்பு பணிகளை மேற்கொள்ளல் தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்டிருந்த ரூ. 97,594,204 பெறுமதியான ஒப்பந்தம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு தேவையான கோப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் 42 ஆம் பிரிவு மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரிடம் சமர்ப்பிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளமை. | பதிலளித்திருக்கவில்லை |

### 1.6.6 பிரதான கணக்கீட்டு அலுவலரினால் மேற்கொள்ள வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| அவதானிப்புகள் | பரிந்துரைகள் | அமைச்சின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் நிதி நிருவாகத்திற்காக பயன்மிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்றினை தயாரித்து பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு அலுவலரினால் உறுதிப்படுத்தல் வேண்டும். அம்முறைமையின் வினைத்திறன் பற்றி காலத்திற்கு காலம் மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையின் செயற்பாட்டுத் தன்மையினை உரியவாறு மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும் எனவும், அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க இருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்ற வேண்டியுள்ளமை | அமைச்சின் நிதி நிருவாகத்தினை வினைத்திறன்மிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை தயாரித்து அதன் செயற்திறன் பற்றி காலத்திற்கு காலம் மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.7 சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஏற்ப செயற்படாமை

சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப செயற்படாத சந்தர்ப்பம் ஒன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | சட்டதிட்டங்களுக்கு மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கவனம் செலுத்தல் | அதற்கேற்ப செயற்படாமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தொழிலாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் VII ஆம் பகுதியின் 41 (2) ஆம் பிரிவு | யாதேனும் ஒரு நபருக்கு ஏற்படுகின்ற விபத்து ஒன்றின் போது சேவை வழங்குநரினால் நட்டஈடு வழங்குவதை புறக்கணித்துள்ள சந்தர்ப்பங்களின் போது அவர்களது அசைவுறா மற்றும் அசைவுறும் ஆதனங்களை தடுத்து வைத்து பகிரங்கக ஏல விற்பனையில் விற்பனை செய்து கிடைக்கப் பெறும் தொகையிலிருந்து பணியாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல் வேண்டும். அவ்வாறு நட்டஈட்டுத் தொகையினை அறவிட்டுக் கொள்ள முடியாது போன ரூ. 10,908,002 பெறுமதியான தொகைக்கு பிடிவிராந்து வழங்கி 01 மாதம் முதல் 117 மாதம் வரையிலான கால தாமதத்திற்கான வழக்கு கோப்புகள் 40 காணப்படல். | நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த தொகையினை துரிதமாக பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருத்தல். | தொழிலாளர் நட்டஈடு பற்றிய நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற தீர்ப்புடன் வழங்கப்படுகின்ற எஸ்கீஸி பிடிவிராந்தை குறித்த சேவை வழங்குநர் வசிக்கும் பிரதேசத்தின் நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பியதன் பின்னர் அந்த நீதிமன்றத்தினால் அதனை அமுல்படுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டமையால் நட்டஈட்டுத் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது.<br><br>இத்தாமத்தை தவிர்த்துக் கொள்வதற்காக தொழிலாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் 41(1) மற்றும் 41(2) ஆகிய பிரிவுகளை திருத்தம் செய்வதற்காக ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் செலவினத் தலைப்புகள் 37 இற்கு ஒதுக்கியிருந்த ரூ. 258,927,400 பெறுமதியான நிதி ஏற்பாடுகளின் மீதி ரூ. 46,399,865 ஆகும். அதில் 20% முதல் 100% வரையிலான இடைவெளியினுள் மீதித் தொகை ரூ. 26,834,988 ஆகக் காணப்பட்டது. | நி.பி. 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகளை இயன்றவு சரியாகவும் வினைத்திறனாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | மீதி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு செலவினத் தலைப்புடனும் தொடர்புடையாக மீதிக்குரிய காணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. |
| (ஆ) | மெஹவர பியஸ கட்டிடத்தில் அமைச்சுக்கு ஒதுக்கியிருந்த பகுதியின் உள்ளக வடிவமைப்பு பணிகளுக்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூ. 200,000,000 பெறுமதியான நிதி ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டிருந்த போதிலும், திட்டமிட்டவாறு இப்பணிகளை 2018 ஆம் ஆண்டிலே பு‘ர்த்தி செய்ய முடியாது போனமையினால் அந்த நிதி ஏற்பாடுகளில் 90% மானவை மீதமாகியிருந்தது. | நிதி ஏற்பாடுகளை வினைத்திறனாகவும் பயன்மிக்க முறையிலும் உபயோகிப்பதற்கு உரியவாறு திட்டமிட்டு அமுல்படுத்த வேண்டியமை. | திட்டமிட்டிருந்த காலத்துடன் தொடர்புடையதாக பிரதான கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பு‘ர்த்தியடையாது இருந்தமையினால், அந்த ஒப்பந்ததார அமைச்சுக்கு சொந்தமான மாடிகளை முறையாக ஒப்படைப்பதற்கு தாமதம் ஏற்பட்டமையினால் உள்ளக வடிவமைப்புப் பணிகளை ஆரம்பிக்கும் பணி தாமதம் அடைந்ததனால் 2018 ஆம் ஆண்டிலே அப்பணிகளை பு‘ர்த்தி செய்ய முடியாது போனது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஊழியர்கள் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய நிறுவகத்திற்கு (NIOSH) ஒதுக்கியிருந்த ரூ. 7,000,000 பெறுமதியான மூலதன ஏற்பாடுகளில் ஆண்டு காலப் பகுதியினுள் 10% ஆனவை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடுகளை வினைத்திறனாகவும் பயன்மிக்க முறையிலும் உபயோகிப்பதற்கு உரியவாறு திட்டமிட்டு அமுல்படுத்த வேண்டியமை. | NIOSH ஒதுக்கியிருந்த 7.0 மில்லியன் ரூபா பெறுமதியான மூலதன ஏற்பாடுகளில் முற்பணம் கிடைக்கப் பெறாமையினால் ஆண்டு காலப் பகுதியினுள் 10% மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | மூலதன செலவினத் தலைப்புகள் 15 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 508,450,000 நிதி ஏற்பாடுகளில் 90மூ முதல் 100மூ வரையிலான இடைவெளியில் ரூ. 508,330,100 பெறுமதியான நிதி ஏற்பாடுகள் உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாடுகளை வினைத்திறனாகவும் பயன்மிக்க முறையிலும் உபயோகிப்பதற்கு உரியவாறு திட்டமிட்டு அமுல்படுத்த வேண்டியமை. | மீதிக்குரிய காரணங்கள் விளக்கப்பட்டிருந்தன. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் உடன்படிக்கைகள் செய்து கொள்ளல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் மெஹவர பியஸ கட்டிடத்தின் உள்ளக நிர்மாணப் பணிகளுக்காக 2018 ஆம் ஆண்டிலே தனியார் நிறுவனம் ஒன்றுடன் செய்து கொண்டிருந்த ரூ. 97,594,204 பெறுமதியான ஒப்பந்தம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறியினும் 2018.12.31 ஆம் திகதியாகும் போது சேவை பு'ர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்காத ரூ. 21,066,583 பெறுமதி ஒன்று பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய இல. 255/2017 உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் நடவடிக்கை எமுறைகளின் பிரகாரம் அமைச்சினால் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்புக்களை உரியாவறு இனங்கண்டு அதன் பெறுமதிகளை உறுதி செய்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு | அமைச்சின் மெஹவர பியஸ கட்டிடத்தின் உள்ளக வடிவமைப்பு பணிகளுக்காக 2018 ஆம் ஆண்டிலே தனியார் நிறுவனம் ஒன்றுடன் செய்து கொண்டிருந்த ரூ. 97,594,204 பெறுமதியான ஒப்பந்தம் பற்றி நிதிக் கூற்றுகளில் குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் தவறுதலாக ரூ. 21,066,583 என கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளமை. | |
| | | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய இல. 255/2017 உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் நடவடிக்கை எமுறைகளின் பிரகாரம் அமைச்சினால் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்புக்களை உரியாவறு இனங்கண்டு அதன் பெறுமதிகளை உறுதி செய்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளமை. | 2018.12.31 ஆம் திகதியாகும் போது ரூ. 21,066,583 பெறுமதியான பொறுப்பொன்றாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அத்தொகையானது, ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஒரு தொகையாக உள்ளமையால் எதிர்வரும் காலங்களில் அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை ஒப்பந்தத் தொகையாக குறிப்பிடுவதற்கு குறித்த அலுவலர்களை ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிலே மூலதனச் செலவுத் தலைப்பின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட மேலதிக நிதி ஏற்பாடுகள் மூலம் 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூ. 3,977,000 பெறுமதியான பொறுப்பு ஒன்றை தீர்த்திருந்த போதிலும் அப்பொறுப்புக்கள் கடந்த ஆண்டின் ஒதுக்கீட்டு கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் தீர்க்க வேண்டிய பொறுப்புகளை சரியாக இனங்கண்டு அதன் பெறுமதிகளை உறுதி செய்து நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளமை. | 2017 ஆம் ஆண்டிலே ரூ. 3,977,000 பெறுமதியான பொறுப்பொன்றினை சீராக்கம் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டிலே நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டது. தவறுதலாக அத்தொகையானது 2017 ஆம் ஆண்டிற்கான கணக்குளில் பதியப்பட்டிருக்கவில்லை. |

## 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| இல. 6000/0000/00/0017/0026/000 உடைய வைப்புக் கணக்கின் ஊடாக நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் அனர்த்தமொன்றிற்கு அல்லது மரணத்திற்கு உள்ளாகின்ற ஊழியர்களுக்காக சேவை வழங்குநரிடமிருந்து அறவிட்டுள்ள போதிலும் உரித்தாளர்களுக்கு செலுத்தாத ரூ. 7,005,436 மீதி ஒன்று நிலவியது. | உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நட்டஈட்டு உரிமையாளர்கள் தமது உரிமையினை சட்டரீதியாக உறுதிப்படுத்தியதன் பின்னர் நட்டஈட்டினை பெற்றுக் கொடுப்பதற்கு தொழிலாளர் நட்டஈடு பற்றி நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. எனினும், சில உரிமையாளர்கள் தமக்குரிய நட்டஈடு பகிர்ந்தளிக்கும் விசாரணையில் கலந்து கொள்வதில்லை. மேலும், சட்ட ரீதியான ஆவணங்களை சமர்ப்பிப்பதுமில்லை. இதன் காரணமாக நட்டஈட்டினை வழங்குவதற்கு முடியாது போயுள்ளது. |

# 3. தொழிற்பாட்டு மீளாய்வு

## 3.1 திட்டமிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| சப்ரகமுவ கிராமிய அபிவிருத்திக்காக மீளாய்வு ஆண்டு காலப் பகுதிக்காக 500 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடு ஒன்று முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 மே மாதம் சப்ரகமுவ அபிவிருத்தி விடயம் | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய இல. 2014/01 உடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றுகையுடன் தொடர்புடைய திட்டமிடலை சரியாக | 2017 – 2020 ஆண்டு காலப் பகுதியினுள் அமுல்படுத்துவதற்காக 6,094.92 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே மாதத்தில் அந்த விடயம் அமைச்சிலிருந்து |

| | | |
|---|---|---|
| அமைச்சிலிருந்து அகற்றப்படும் வரையில் நோக்கத்திற்குரிய பணிகளுக்காக எதுவித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்கு அமைச்சினால் கவனம் செலுத்த வேண்டியுள்ளமை. | அகற்றப்படும் வரையில் எதுவித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 கடமைகளை நிறைவேற்றல்

---------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| தொழில் புரிந்து கொண்டிருந்த போது ஏற்படுகின்ற பாரதூரமான மற்றும் பாரதூரமற்ற விபத்துகளுடன் தொடர்புடையதாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நட்டஈட்டு அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த 10 முறைப்பாடுகளுடன் தொடர்புடைய கோப்புகள் பற்றி மீளாய்வு ஆண்டின் இறுதி வரையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் மற்றும் துரிதமாகவும் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ள வேண்டியுள்ளமை | தொழிலாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நட்டஈட்டினை அறவிட்டுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் போது சரியான நீதிமன்ற நடைமுறைகளை பின்பற்ற வேண்டியுள்ளமையினால் அதற்காக குறிப்பிடத்தக்க காலம் ஒன்று எடுக்கின்றது. |

## 3.2 பொருளாதார ரீதியற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| தொழில் அமைச்சின் ஊடகப் பிரிவிற்கு ரூ. 1,625,781 பெறுமதியான தொகையினை செலவிட்டு வீடியோ கெமரா ஒன்று மற்றும் அதன் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த கெமராவின் தொழில்நுட்பத்திற்கு | கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் மற்றும் துரிதமாகவும் | குறித்த பிரிவின் பணிகள் தாமதமடைதல் மற்றும் தேவையான நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை காரணமாக பதிப்பித்தல் மென்பொருளை |

| | | |
|---|---|---|
| பொருத்தமான பதிப்பித்தல் மென்பொருள் ஒன்று (Suitable editing software) வழங்கப்பட்டிராமையால் வீடியோ கெமராவை கொள்வனவு செய்தமை மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனை பெற்றுக் கொள்ள முடியாது போயிருந்தது. | நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ள வேண்டியுள்ளமை | இது வரையில் கொள்வனவு செய்ய முடியாது போயுள்ளது. |

## 4. நல்லாட்சி

### 4.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் 01 ஆண்டு முதல் 25 ஆண்டிற்கு மேற்பட்ட கால இடைவெளி தொடக்கம் வயதினை புு'ர்த்தியடைந்த இளம் வயதினருக்கு விடுவிக்க வேண்டிய ரூ. 9,963,455 பெறுமதியான 384 கணக்குகள் கணக்காய்வு திகதி வரையில் தீர்க்கப்படாது இருந்தன. | வயது எல்லையை புு'ர்த்தி செய்த இளம் பருவத்தினருக்கு துரிதமாக குறித்த நிதியினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அக்கணக்குகளில் பெரும்பாலான 1980 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப் பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட கணக்குகளாக காணப்படுவதுடன் அதற்குரிய வதிவு முகவரி மாற்றப்பட்டிருத்தல், முகவரிகளை விட்டுச் செல்லல், கணக்கு உரிமையாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமை, கணக்கு உரிமையாளர்கள் மரணித்துள்ளமை உள்ளிட்ட காரணங்களின் மீது தீர்க்க முடியாது இருந்தன. 2016 ஆம் ஆண்டு முதல் தரவு முறைமை ஒன்றினை ஆரம்பித்து விடுவிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு அலுவலரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆம் திகதிய இல. 02/2018 உடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் 02ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வு ஆண்டுடன் தொடர்படைய மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளின் நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டியுள்ளமை. | 2018 ஆம் ஆண்டிற்கான திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நிதி ஏற்பாடுகள் இல்லை எனவும் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக இப்பயிற்சி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருப்பது 2019 ஏப்ரல் மாதத்திலாக இருப்பதனால் எதிர்வரும் காலத்தில் திட்டமிட்டவாறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட விரும்புகின்றேன். |